بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

06 துல்ஹஜ் 1440 ஹிஜ்ரி கமரி 08 ஸுஹூர் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

08 ஆகஸ்ட் 2019


**அல்லாஹ்வின் கட்டளை**

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللّٰهِ

மக்களு(டைய பயனு)க்காகத் தோற்றுவிக்கப் பெற்ற நீங்கள் (மற்றெல்லாரையும் விடச்) சிறந்த கூட்டத்தினராவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள்) மேலும் அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்கின்றீர்கள். (3:111)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவனுக்காக அறிவைக் கொண்டு செயல்படுங்கள். எனவே அறிவில் புரியும் திறன் உருவாக வேண்டும். மேலும் நேர்மையாளராகவும், இறையச்சமுடையவராகவும் ஆகுங்கள். தூய்மையான அறிவு விண்ணிலிருந்து வருகிறது. மேலும் அது தன்னுடன் ஒரு ஒளியைக் கொண்டு வருகிறது**

**வானத்தின் ஒளி இறங்கியுள்ளது. மேலும் அது உள்ளத்தைப் பிரகாசமாக்க விரும்புகின்றது. இதனை ஏற்றுக் கொள்வதற்கும் இதிலிருந்து பயன் பெறுவதற்கும் ஆயத்தமாகிக் கொள்ளுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**புத்திக்கூர்மை ஏற்படுவதற்காக நேர்மையாளராகவும், இறையச்சமுடையவராகவும் ஆகுங்கள்**

சற்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் சிந்தித்துப் பாருங்கள். இறைவனுக்காக அறிவைக் கொண்டு செயல்படுங்கள். எனவே அறிவில் புரியும் திறன் உருவாக வேண்டும். மேலும் நேர்மையாளராகவும், இறையச்சமுடையவராகவும் ஆகுங்கள். தூய்மையான அறிவு விண்ணிலிருந்து வருகிறது. மேலும் அது தன்னுடன் ஒரு ஒளியைக் கொண்டு வருகிறது. ஆனால் அந்த ஒளியானது தகுதியானவரைத் தேடிக் கொண்டிருக்கிறது. இந்த தூய்மையான தொடரை மனிதனின் பௌதீக சட்டத்தில் பார்க்கின்றோம். மழை வானத்திலிருந்து வருகின்றது. ஆனால் இந்த மழையினால் சில இடங்கள் பசுமையாகவும், சில இடங்களில் முள்ளாகவும், சில இடங்களில் புற்களாகவும் மாறி விடுகிறது. மேலும் இந்த ஒரு சொட்டு மழையானது சில நேரங்களில் கடலின் ஆழம் வரை சென்று முத்தாக ஆகி விடுகின்றது.

در باغ لاله روید و در شوره بوم خس

(அது தோட்டத்தில் பூக்களை முளைக்கச் செய்கின்றது. மேலும் காய்ந்த நிலத்தில் புற்களை முளைக்கச் செய்கின்றது)

நிலம் சரியாக இருக்கவில்லை என்றால் பிறகு மழையினால் எவ்வித பயனும் ஏற்படாது. மாறாக, நஷ்டத்தை, தீங்குகளையுமே திருப்பித் தருகின்றது. எனவே வானத்தின் ஒளி இறங்கியுள்ளது. மேலும் அது உள்ளத்தைப் பிரகாசமாக்க விரும்புகின்றது. இதனை ஏற்றுக் கொள்வதற்கும் இதிலிருந்து பயன் பெறுவதற்கும் ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். அதுவன்றி மழையினால் நல்ல விளைவைத் தராத பூமியை அது வீணாக்கி விடுவதைப் போன்று ஆகி விடக்கூடாது.

அதுபோன்று நீங்களும் ஒளி இருக்கின்ற நிலையில் இருளில் சென்று, தடுமாறி இருளான கிணற்றில் விழுந்து அழிந்து விடக்கூடாது. அல்லாஹ் கருணைமிக்க தாயை விட அதிக கருணையாளன் ஆவான். அவனது படைப்பினங்கள் அழிவதை அவன் விரும்புவதில்லை. அவன் நேர்வழி மற்றும் ஒளியின் வழிகளை உங்களுக்காக திறந்துள்ளான். எனவே நீங்கள் அதன்படி செயல்படுவதற்காக உங்களது அறிவைக் கொண்டும், உள்ளத்தை தூய்மைப்படுத்தியவாறும் செயல்படுங்கள்.

எவ்வாறு நிலத்தை உழவாமல் ஆயத்தப்படுத்தாமல் விதையை விதைக்க முடியாதோ அதே போன்று எப்போது வரை முயற்சிகள் மூலமாக உள்ளம் தூய்மையாகவில்லையோ அப்போது வரை தூய்மையான அறிவு வானத்திலிருந்து இறங்குவதில்லை.

இக்காலத்தில் இறைவன் மிகப்பெரும் அருளை செய்துள்ளான். தமது மார்க்கம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதவிக்காக ரோஷத்தை வெளிப்படுத்தி ஒரு நபரை அவன் அனுப்பியுள்ளான். இதன் மூலம் அவர் உங்களை அந்த ஒளியின் பக்கம் அழைக்க வேண்டும்.

இக்காலத்தில் எவ்வித கூச்சலும் குழப்பமும் இல்லையென்றால், மார்க்கத்தை அழிப்பதற்காக எவ்வித முயற்சிகள் செய்யப்படுகின்றனவோ அத்தகைய முயற்சிகள் செய்யப்படவில்லை என்றால் பிறகு ஒன்றுமில்லைதான். ஆனால் ஒவ்வொரு புறத்திலிருந்தும் இஸ்லாத்தை அழிக்கும் கவலையில் சமுதாயங்கள்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இந்த மூன்று நாட்களில் குறிப்பாக உலகத்தின் மீதான நேசத்தை முற்றிலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்**

**எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக கருதப்படுவதற்கு இறை நேசத்தைப் பெறுவதற்கும், அவனது அருட்களின் வாரிசாக ஆகுவதற்கும் அல்லாஹ்வின் இன்பத்தையும் கருணையையும் பெறுவதற்கும் எல்லா ரீதியிலும் தமது செயல் நிலைமைகளை சரி செய்வது அவசியமாகும். மேலும் இந்த ஜல்ஸாவின் ஏற்பாடு என்பது நன்மைகளை செய்வதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவே ஆகும்**

**நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றதற்கான ஒளி நமது ஒவ்வொரு செயலிலும் தென்பட வேண்டும்**

**எனவே இந்நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். இறைவன் திருப்தியடையாத மக்களை சார்ந்தவர்களாக நாம் கணக்கிடப்படக்கூடாது. மாறாக, அல்லாஹ் நினைவு கூரக்கூடிய மக்களோடு நாம் கணக்கிடப்பட வேண்டும். மேலும் இறைவனுடன் நாம் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் உள்ளங்களின் இருளை அழித்து விடக்கூடியவர்களாக நாம் திகழ வேண்டும்**

**எவர் தனது சகோதரரிடத்தில் இறைவனுக்காக அன்பு காட்டுகின்றாரோ அல்லாஹ் அவர் மீது எல்லையற்று அருள்பாலிக்கின்றான். எனவே இந்த நாட்களை தங்களுக்கிடையிலான பகைமையை அகற்றுவதற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸா சாலானாவை இறை அடையாளங்களில் சேர்த்துள்ளார்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்த பிறகு எங்களுடைய ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளில் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கின்றது என்று உலகிற்கு கூற வேண்டும்**

**பொறுப்பாளர்களிடத்தில் சகிப்புத்தன்மைக்கான மனப்பாங்கு மிக அதிகமாக இருக்க வேண்டும். இது பொறுப்பாளர்களின் சிறப்பான பொறுப்பாகும்**

**எனவே பொறுப்பாளர்கள் எல்லா நிலையிலும் தங்களைத் தொண்டராக கருத வேண்டும். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களும், ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களும் பொறுப்பாளர்களை ஜமாஅத் அமைப்பின் பிரதிநிதிகளாக கருத வேண்டும்**

**அசல் விஷயம் பதவியல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, அசல் விஷயம் என்பது தனது பைஅத்திற்குரிய உரிமைகளை வழங்குவதாகும்**

**நற்பாக்கியத்திற்கான சாட்சியம் பகன்றவாறு நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். இது முதலாது அடியாகும். இதுவே முழுமையான காரியமல்ல. இதன் உச்சத்தை அடைவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளின்படி செயல்படுவது அவசியமாகும்**

**ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின் முகம் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் உள்ளது. இஸ்லாத்தின் முகம் உள்ளது. எனவே இந்த முகங்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எம்மிடம் பைஅத் செய்து விட்டதாக வாதம் செய்த பிறகு எம்மை அவமானப்படுத்தாதீர்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனி கால்ஸ்ரோயே மாநாட்டுத்திடலில் 05 ஜூலை 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **05 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

குத்பாவின் ஆரம்பத்தில் ஹுஸூர் அவர்கள் ஜல்ஸாவின் ஏற்பாட்டாளர்களிடம் கேட்டார்கள்: சப்தம் கடைசி வரை வருகின்றதா? உங்கள் ஏற்பாடு சரியாக உள்ளதா? Check செய்தீர்களா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததின் மூலம் நமக்கு ஏராளமான அல்லாஹ்வின் அருட்களும், அருட்கொடைகளும் கிடைத்துள்ளன. அதில் ஒரு மாபெரும் அருள் மற்றும் அருட்கொடை ஜலஸா சாலானா வடிவில் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் நாம் நமது ஆன்மீக, நல்லொழுக்க மற்றும் அறிவார்ந்த நிலைகளை மேம்படுத்த முயற்சி செய்கின்றோம். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், இறையச்சத்தில் முன்னேறுவதற்கும் வழிவகைகளை செய்ய முடிகின்றது. மேலும் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்குவதற்கும் தத்தமது உள்ளங்களை தூய்மை செய்வதற்கும் இந்த ஆண்டு மாநாடு வழிவகை செய்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆண்டு மாநாட்டை ஆரம்பித்ததன் நோக்கத்தை முழுமை செய்வதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. தங்களுக்கிடையிலான பகைமைகள் மற்றும் விரிசல்களையும் சமாதானம் மற்றும் நெருக்கத்தில் மாற்றுவதற்கு இதன் மூலம் முயற்சி செய்யப்படுகின்றது. மேலும் தங்களை வீணானவற்றிலிருந்து தூய்மையாக்குதற்காகவும் முயற்சி செய்யப்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவை தொடங்கியதற்கான நோக்கங்களாக இதனையே கூறியுள்ளார்கள். அஹ்மதிகளின் ஒரு பெரும் எண்ணிக்கை ஆண்டு முழுவதும் ஆண்டு மாநாட்டிற்காக காத்திருக்கின்றனர். புதிய ஆண்டின் கேலண்டர் தொடங்கியதும் அந்த எதிர்பார்ப்பு மற்றும் ஜல்ஸா நடத்த வேண்டும் என்ற ஆர்வம் ஆகியவை மேலும் வேகமெடுத்து விடுகின்றது.

இங்கு வாழ்பவர்களுக்கும் எதிர்பார்ப்பு உள்ளது. இங்கு ஒரு நீண்ட காலமாக வசிப்பவர்களுக்கு குறிப்பாக அதிக எதிர்பார்ப்பு இருக்கின்றது. மேலும் பாகிஸ்தானிலிருந்து தங்களது நிலைமைகளின் காரணமாக இங்கு அடைக்கலம் பெற்று புதிதாக இங்கு வந்தவர்களும் இருக்கின்றார்கள். ஏனென்றால் அங்கு சட்ட ரீதியிலான தடைகளின் காரணமாக அவர்களால் ஜல்ஸா நடத்த முடியாது.

ஆண்டு மாநாடு என்றால் என்றால் என்ன? என்று கூட அவர்களுக்கு நீண்ட காலமாக தெரியாது. இப்போது அதன் எண்ணிக்கை நூற்றுக்கணக்கிலிருந்து ஆயிரக்கணக்கில் ஆகி விட்டது. அது அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மேலும் இதே போன்று வெளிநாடுகளிலிருந்து ஜல்ஸாவில் பங்கு கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஜெர்மனிக்கு அதிகமான எண்ணிக்கையில் இப்போது மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர். இந்த ஆண்டு ஆப்ரிக்காவின் சில நாடுகளிலிருந்தும் கூட சில மக்கள் ஜல்ஸாவுக்கு வந்துள்ளனர். உள்ளூர் வாசிகளும் இதில் அடங்குவர்.

ஜல்ஸா நடத்துவதன் நோக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதன் காரணமாகவே ஜல்ஸாவில் பங்கு பெற வேண்டும் என்ற ஆர்வமும் ஜல்ஸாவிற்கான எதிர்பார்ப்பும் மக்களுக்கு இருக்கின்றது. இருக்கவும் வேண்டும். இந்த எண்ணத்துடன் ஜல்ஸாவில் கலந்து கொள்ளாதவரின் எதிர்பார்ப்பு வீணானதும் பொருளற்றதுமாகும்.

எனவே ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் ஒவ்வொரும் ஆணும், பெண்ணும் இக்கருத்தைக் கண்முன் நிறுத்த வேண்டும். அதாவது அவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றாரா? அல்லது இந்த எண்ணத்துடன் ஜல்ஸாவில் பங்கு கொள்கின்றாரா? என ஆய்வு செய்ய வேண்டும். தக்வாவில் முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றாரா? உயர் தரமான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்க முயற்சி செய்கின்றாரா? என்று பார்க்க வேண்டும்.அல்லது இந்த எண்ணுத்துடன் இங்கு வந்திருக்கின்றாரா? என்றாவது பார்க்க வேண்டும்.

அவ்வாறில்லையென்றால் நான் கூறியது போன்று அத்தகைய நபர் ஜல்ஸாவில் வருவது வீணானதாகும். ஜல்ஸாவில் கலந்து கொள்வது அவருக்கு எந்த பயனும் அளிக்காது. சூழல் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் சூழலின் தாக்கத்தைப் பெறுவதற்கு மனிதனுடைய முயற்சியும் அதில் அடங்கியிருக்கின்றது.

எனவே நாம் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் மேற்கூறப்பட்ட அனைத்து விஷயங்களையும் பெறுவது சாத்தியமாகி விடும். மேலும் அல்லாஹ்வின் அருட்களை நாம் ஈர்க்கக் கூடியவராக ஆகி விடுவோம். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவிற்கு வரக் கூடியவர்களுக்காக செய்த துஆக்களுக்கு உரிமை படைத்தவர்களாக நாம் ஆகி விடுவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த எண்ணத்துடன் ஜல்ஸாவில் பங்கு பெறாதவர்களும், தங்களது செயலை போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்ளாதவர்களும் தம்மைச் சார்ந்தவர்கள் அல்ல என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றைய காலத்தில் பீர்மார்களைப் போன்று வெளிப்படையான அலங்காரத்தை காட்டுவற்காக மட்டும் பைஅத் செய்தவர்களை ஒன்று கூட்டுவதை நான் ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக, நான் இந்த ஜல்ஸாவிற்கு ஒன்று கூட்டுவதன் காரணம் அல்லாஹ்வின் படைப்பினங்களின் சீர்திருத்தம் ஆகும்.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி **6** பக்கம் **395**)

எனவே அன்னார் தெளிவாகக் கூறி விட்டார்கள். நான் வெளிப்படையான அலங்காரத்திற்காகவும், பகட்டிற்காகவும் மக்களை ஒன்றுகூட்டவில்லை. அது எனது நோக்கமும் இல்லை. ஆனால் பீர்மார்கள் பெரும் பெரும் திருவிழாக்களின் பெயரால் மக்களை ஒன்றுகூட்டுகின்றனர். மக்களை ஒன்றுகூட்டுவதற்கான வழிமுறையாக ஜல்ஸாவை ஆக்கியிருப்பதன் நோக்கம் என்னவென்றால், அல்லாஹ்வின் படைப்பினங்களின் சீர்திருத்தம் நடைபெற வேண்டும் என்பதாகும்.

மேலும் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தனது சீர்திருத்தத்தை செய்யாதவர்களோடு தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று மட்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறவில்லை. மாறாக, வெறுப்பையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்தை முழுமை செய்தவாறு நாம் அன்னாரிடம் பைஅத் செய்த பிறகும் நமது உள்ளத்தில் உலகத்தின் நேசம் மிகைத்திருந்தால் மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நேசம் உலக நேசத்தை விட மிகைத்திருக்கவில்லை என்றால் பின்னர் மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரம் 40 ஆயிரம் என்ற அளவுக்கு இருந்தாலும் அதனால் என்ன பயன்? அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு ஏற்ப நாம் நமது வாழ்க்கையை கழிக்கவில்லை என்றால் மேலும் இந்த மூன்று நாட்களில் கூட உலகமே நமது குறிக்கோளாக இருக்குமென்றால் பின்னர் ஜல்ஸாவில் கலந்து கொண்டு என்ன பயன்?

எனவே இவ்விஷயங்களை சீர்தூக்கிப் பார்ப்பது நமக்கு அவசியமாகும். ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்குரிய ரமலான் மாதம் சில நாட்களுக்கு முன்பே முடிந்திருக்கின்றது. அதில் தனிப்பட்ட இறைவணக்கங்கள் மற்றும் நோன்புகள் மற்றும் இறைவனை நினைவு கூருதல் ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் ஒரு நம்பிக்கையாளருக்கு கிடைத்தது. தற்போது மீண்டும் மூன்று நாட்களுக்கான பயற்சி முகாம் வந்துள்ளது.

அதில் மார்க்க மற்றும் அறிவார்ந்த ஆற்றலை முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளுடன் இறை வணக்கங்கள் மற்றும் இறைவனை நினைவு கூர்வதற்கான சூழல் உள்ளது. மேலும் இந்த அனைத்து விஷயங்களையும் கூட்டாக வெளிப்படுத்துவதற்கு இது சிறந்த சர்ந்தர்ப்பம் ஆகும். அனைவரும் ஒன்று கூடி இறைவணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றனர். நஃபில்களும் தொழுகின்றனர். தஹஜ்ஜுத் தொழுகின்றனர். மேலும் தத்தமது மொழிகளில் தமது உள்ளத்திலுள்ள துஆக்களை மக்கள் செய்கின்றனர். இறைவனை நினைவு கூருகின்றனர். ஆனால் முழு

சூழலும் இறை தியானத்தை செய்து கொண்டிருந்தால் பின்னர் அது இறைவனை நினைவு கூருவதற்கான கூட்டான வடிவமாக இருக்கும்.

நாம் இதிலிருந்து பயன் பெறவில்லை என்றால் பின்னர் எப்போது பயன் பெறுவோம்? எப்படி பயன் பெறுவோம்? எனவே ஒரு மாபெரும் பொறுப்பை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மீது சுமத்தியுள்ளார்கள். மேலும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் அன்னார் மாபெரும் எதிர்பார்ப்புகளை வைத்துள்ளார்கள். இது ஒன்றும் சாதாரண காரியமல்ல.

அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நேசத்திற்கு எதிரில் உலகத்தின் மீதான நேசம் தனிந்து விடும்போதுதான் இந்த சூழலின் உண்மையான பயன் கிடைக்கும். உலகத்தில் இருந்தவாறு இறை நேசம் மற்றும் இறைதூதரின் மீதான நேசத்திற்கு எதிரில் உலகத்தின் மீதான நேசத்தை இரண்டாம் பட்சமாக ஆக்கிக் கொள்வது மாபெரும் காரியமாகும். மேலும் இந்த விஷயமே ஒருவரை உண்மையான முஃமினாக ஆக்குகின்றது.

இந்த ஜல்ஸாவின் மூன்று நாட்களுக்குப் பிறகு உலகப் பணிகளையும் செய்ய வேண்டும். ஆனால் உலகப் பணிகளுக்கு மத்தியில் நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கும்போதுதான் இந்த தர்பிய்யத் மற்றும் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான பயன் கிடைக்கும். ஜல்ஸாவின் நாட்களில் கடை வீதிகள் திறந்திருப்பதையும், கடைகள் நடத்தப்படுவதையும் நாம் இங்கு பார்த்திருக்கின்றோம்.

இந்த மூன்று நாட்களில் குறிப்பாக உலகத்தின் மீதான நேசத்தை முற்றிலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உலகப் பொருட்கள் இங்கு வாங்கி விற்கப்படுகின்றன. ஆனால் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களும், கடைகளை நடத்தக் கூடியவர்களும் இவ்விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். கடை வீதிகளில் சுற்றித் திரிவதும், ஷாப்பிங் செய்வதும், தமது பொருட்களில் லாபம் ஈட்டுவதற்கு முயற்சி செய்வதும் உலகக் காரியங்களாகும்.

எனவே இதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். வியாபாரிகளும், வாடிக்கையாளர்களும் இந்த ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் சிறப்பான கவனத்துடன் கேட்க வேண்டும். அதன் பிறகு இடைவேளை நேரத்தில் அவர்களுக்கு வியாபாரத்திற்கு உரிமை உள்ளது. இருவருக்கும் கடை வீதிக்கு செல்வதற்கு அனுமதி உள்ளது.

ஆனால் அந்நிலையிலும் கடை வீதியினுடைய உரிமையை வழங்க முயற்சி செய்ய வேண்டும். கடை வீதிகளுக்குரிய உரிமை என்பது, அங்கு சென்று வரும்போது ஒருவர் மற்றவருக்கு சலாம் கூற வேண்டும். இறைவனை நினைவு கூர்வதில் மும்முரமாக இருக்க வேண்டும். வியாபாரிகள் ஆகுமான லாபத்துடன் தமது பொருட்களை விற்க வேண்டும். ஒருவருடைய நிர்பந்தத்தை பயன்படுத்தி ஆகுமற்ற லாபத்தை சம்பாதிக்கக்கூடாது.

நான் கூறியது போன்று கடை வீதிகளிலும் இறைவனை நினைவு கூருவதை நிரந்தரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கடைக்காரர்களும் அந்நேரத்தில் இக்காரியங்களில் ஈடுபட வேண்டும். இதுபோன்ற நிலையே நாம் நமது வெளிப்படையான வடிவில் மேற்கொண்டால் அப்போது நமது நிலைமையும் மாறி விடும். நமக்குள்ளும் இறையச்சம் ஏற்படும். இறைவன் மீதான அன்பு ஏற்படும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் இந்த மாறுதல்களை உருவாக்குவதற்காகவும், இறையச்சத்தை உருவாக்குவதற்காவும் மேலும் கூறுகின்றார்கள்:

இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்க நாடியுள்ளான். மேலும் இதன் மூலம் அதற்கான காரணத்தையும் வைத்துள்ளான். உண்மையான இறைஞானம் என்பது உலகிலிருந்து மறைந்து விட்டது. மேலும் உண்மையான இறையச்சம் மற்றும் பரிசுத்தத்தன்மை என்பது தற்போதைய உலகில் தென்படுவதில்லை. எனவே அதனை நாம் மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 277–288)

அடுத்து ஒரு சந்தர்ப்பத்தில் நமது இறையச்சத்தின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக அறிவுரை வழங்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

தன்னை எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதும் அனைத்து மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் வழி நடக்கும்போதுதான் நீங்கள் உண்மையிலேயே எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதப்படுவீர்கள்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

அடுத்து ஓரிடத்தில் அன்னார் அல்லாஹ்வின் மகத்துவமும் மற்றும் அன்பை உள்ளங்களில் ஏற்படுத்துவது தொடர்பாகக் கவனமூட்டியவாறு இவ்வாறு அறிவுரை செய்கின்றார்கள்:

இறைவனின் மகத்துவத்தை உள்ளங்களில் நிலைநாட்டுங்கள். மேலும் அவனது ஏகத்துவத்தை வெறும் நாவால் மட்டுமல்லாமல் மாறாக செயல் ரீதியில் வெளிப்படுத்துங்கள். அப்போது செயல் ரீதியில் தனது கருணையையும் இன்பத்தையும் அல்லாஹ் உங்களுக்கு வெளிப்படுத்துவான்.


(அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 308)

எவ்வாறு நாம் உண்மையான இறையச்சத்தைப் பெற வேண்டும் என்பதை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே இவை இறைவணக்கங்களாகும். ஏதோவொரு நன்மையை செய்வது இறையச்சமல்ல. மாறாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

அனைத்து வகையான நன்மைகளை செய்வதும், இறைவன் மற்றும் அவனது அடியார்களின் அனைத்து வகையான உரிமைகளையும் செலுத்துவதே அசல் இறையச்சமாகும்.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 210)

இந்த அடிப்படையில் நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் நமது நிலைமை நமக்கு முன்னால் தானாக வந்து விடும். சில மக்கள் வீட்டிற்கு வெளியில் ஜமாஅத் பணிகளில் நல்லவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் குடும்பத்தில் மனைவி மக்கள் அவர்களால் இன்னல்களுக்கு ஆளாகி உள்ளனர். சிலர் குடும்பத்தினர்களின் உரிமைகளை வழங்கி வருகின்றனர். ஆனால் அல்லாஹ்வுடைய உரிமை மற்றும் அவனது இறைவணக்கத்தின் உரிமைகளின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. இதுபோன்ற புகார்கள் கிடைத்து வருகின்றன.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

சிலர் வெளிப்படையில் இறைவணக்கம் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் சமூகத்தினருக்கு மத்தியிலான விவகாரங்களில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை பறிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். சிலர் உலக மக்களுக்கு முன் சில நன்மைகளை செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் அதனை வெறும் பகட்டிற்காகச் செய்கின்றனர். அல்லாஹ் நமது எண்ணங்களை அறிகின்றான். மேலும் அவன் நமது அனைத்து நிலைமைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை மறந்து விடுகின்றனர்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக கருதப்படுவதற்கு இறை நேசத்தைப் பெறுவதற்கும், அவனது அருட்களின் வாரிசாக ஆகுவதற்கும் அல்லாஹ்வின் இன்பத்தையும் கருணையையும் பெறுவதற்கும் எல்லா ரீதியிலும் தமது செயல் நிலைமைகளை சரி செய்வது அவசியமாகும்.

மேலும் இந்த ஜல்ஸாவின் ஏற்பாடு என்பது நன்மைகளை செய்வதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவே ஆகும். சொற்பொழிவாளர்கள் தத்தமது சொற்பொழிவில் இதன் பக்கமே கவனமூட்டுகின்றனர். நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றதற்கான ஒளி நமது ஒவ்வொரு செயலிலும் தென்பட வேண்டும். நமக்கு ஒரு சிறப்பான சூழலில் இதன் பக்கம் கவனமூட்டப்படுகின்றது.

இந்த நோக்கத்தைப் பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். எவர்களைக் குறித்து அல்லாஹ் கூறியுள்ளானோ அவர்களே அல்லாஹ்வின் முழுமையான அடியார்கள் ஆவர். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்.

لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ

அதாவது எந்தவொரு வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் அவர்களை அல்லாஹ்வின் நினைவிலிருந்து கவனமற்றவர்களாக ஆக்கி விடாது.

அன்னார் கூறினார்கள்: உள்ளம் இறைவனுடன் உண்மையான தொடர்பையும் அன்பையும் ஏற்படுத்திக் கொண்டு விட்டால் பின்னர் அந்த உள்ளம் அல்லாஹ்விடமிருந்து தனித்து விடுவதே கிடையாது. இதன் நிலைகளை அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அதாவது உதாரணமாக ஒருவருடைய குழந்தை நோயுற்று விட்டால் அந்த நபர் எங்கு சென்றாலும் எந்த பணியில் மூழ்கியிருந்தாலும் அவரின் உள்ளமும் கவனமும் அந்த குழந்தையின் மீதே இருக்கும். இந்த உதாரணத்தின் மூலம் நம்மால் இந்நிலைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 20,21)

ஆக நம்மில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பார்க்க விரும்புகின்ற நிலை இதுவேயாகும். இந்த நிலையை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதற்காகத்தான் நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். இந்த நிலையை பெறக் கூடியவர்களாக நாம் ஆகுவதற்காக நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்விடத்தில் துஆவும் செய்ய வேண்டும். நாம் இந்நிலையை நம்மிடத்தில் உருவாக்கிக் கொண்டால் அதற்காக முயற்சி செய்தால் அல்லாஹ்வும் நம்மை நினைவில் கொள்வான்.

அல்லாஹ் இதைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ அதாவது அல்லாஹ்வை நினைவு கொள்ளுங்கள். அல்லாஹ்வும் உங்களை நினைவில் கொள்வான்.

எனவே எவர்களை அல்லாஹ் நினைவு கூருகின்றானோ அவர்கள் எவ்வளவு நற்பாக்கியம் பெற்ற மக்களாக இருக்கின்றார்கள். நமது உலக விவகாரங்கள் நமது எஜமானரை மறக்காமல் இருக்கின்ற அளவிற்கு நமது எஜமானன் நம்மீது அருள் செய்ய வேண்டும். இந்த நாட்களில் நாம் இறைவனுடைய உண்மையான நினைவை மேற்கொள்ள வேண்டும். அதற்காக நாம் குறிப்பாக இந்நாட்களில் முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹ் நம்மை நினைவில் வைத்து தனது அருட்களுக்கு வாரிசாக்கி விடுவான்.

எனவே ஜல்ஸாவில் வரக் கூடியவர்களும், டியூட்டி கொடுக்கக் கூடியவர்களும் இறைவனை நினைவு கூருவதில் தமது நாவினை நனைத்து வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் இறைநெருக்கத்தைப் பெறக் கூடியர்களாக ஆக வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹ் நம்மை நினைவு கூருவான். அந்நிலையில் அதைவிட பெரிய விஷயம் நமக்கு வேறு என்னவாக இருக்க முடியும். எனவே நாம் அதனைப் பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப விண்ணில் நாம் அன்னாருடைய ஜமாஅத்தைச் சார்ந்தவராக கணக்கிடப்படுவோம்.

நீங்கள் இறையச்சத்தின் வழிகளில் உண்மையிலேயே வழிநடக்கும்போதுதான் விண்ணில் நீங்கள் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதப்படுவீர்கள் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்கள் நம்மை கவலையில் ஆழ்த்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

நம்மில் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் பைஅத் செய்த பிறகு அவர்களது உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அஹ்மதியாக இருப்பதனால் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் பகைமையை எதிர்கொள்ள நேரிட்டதன் காரணமாக உங்களில் பலர் இங்கு ஹிஜ்ரத் செய்து வந்துள்ளீர்கள். நாட்டின் சட்டங்கள் நமது மார்க்க சுதந்திரங்களைத் தடை செய்தது. ஆனால் இந்த அனைத்து விஷயங்களுக்குப் பிறகும், இந்த அனைத்து துன்பங்களுக்குப் பிறகும் மேலும் பாகிஸ்தானிலும் இன்னும் சில நாடுகளிலும் அஹ்மதிகள் சகித்து வருகின்றனர். அல்லது உங்களில் சிலர் சகித்து


**திருக்குர்ஆனிலிருந்து...**

நாம், நம் அடியாருக்கு இறக்கிய (வேதத்)தில் நீங்கள் ஐயம் கொண்டிருந்தால், நீங்கள் உண்மையாளர்களாயின் இது போன்ற ஓர் அதிகாரத்தைக் கொண்டு வாருங்கள். அல்லாஹ் அல்லாத உங்களுடைய உதவியாளர்களையும் (உங்கள் உதவிக்காக) அழைத்துக் கொள்ளுங்கள். (2:24)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் தெரிந்து கொண்டே மெய்யைப் பொய்யுடன் கலக்கவோ, உண்மையை மறைக்கவோ செய்யாதீர்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள். சக்காத்து கொடுங்கள். இறைவனை (முழு மனத்துடன்) வணங்குபவர்களுடன் சேர்ந்து (முழு மனத்துடன்) வணங்குங்கள். (2:43,44)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

வருகின்றீர்கள். அவ்வாறான நிலையில் தனது செயல்களின் குறைபாடுகளின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை சார்ந்தவராக கணக்கிடப்படவில்லை என்றால் மேலும் நற்பாக்கியம் பெற்ற மக்களைச் சார்ந்தவர்களாகக் கணக்கிடப்படவில்லை என்றால் அத்தகைய மக்கள் நஷ்டத்திற்கான வியாபாரங்களையே செய்துள்ளனர் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

எனவே இந்நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். இறைவன் திருப்தியடையாத மக்களைச் சார்ந்தவர்களாக நாம் கணக்கிடப்படக்கூடாது. மாறாக, அல்லாஹ் நினைவு கூரக்கூடிய மக்களோடு நாம் கணக்கிடப்பட வேண்டும். மேலும் இறைவனுடன் நாம் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் உள்ளங்களின் இருளை அழித்து விடக்கூடியவர்களாக நாம் திகழ வேண்டும். இங்கு ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளின் இடைவேளையின் போதும், இரவிலும் அல்லாஹ்வின் நினைவுடன் இந்த துஆவையும் கேளுங்கள். மேலும் இவ்வாறு உடன்படிக்கையும் செய்யுங்கள்.

அதாவது அல்லாஹ்வே! நாங்கள் நல்லெண்ணத்துடன் உனது மஸீஹால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளோம். நிச்சயமாக இந்த ஜல்ஸா உனது சிறப்பான உதவி ஒத்தாசைகளாலும், ஞானத்தாலும் தொடங்கப்பட்டது. இதில் உனது திருப்தியைப் பெறுவதற்காகவும், உன்னை நினைவு கூர்வதில் முன்னேறுவதற்காகவும், உனது அன்பைப் பெறுவற்காகவும் நாங்கள் கலந்து கொண்டுள்ளோம். எனவே இந்த ஜல்ஸாவுடன் தொடர்புடைய அனைத்து பரக்கத்துகளுக்கும் நீ எங்களை வாரிசாக்குவாயாக. எங்களிடத்தில் நீ விரும்புகின்ற தூய மாற்றங்களை ஏற்படுத்துவாயாக. அதனை நிலைநாட்டுவதற்காகவே நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை இக்காலத்தில் அனுப்பியுள்ளாய்.

இவ்வாறு துஆ செய்வதன் மூலம் நாம் அன்னாரது பைஅத்தில் உண்மையான பொருளில் பங்கு பெற்றவர்ளாக ஆக முடியும். எனவே நாம் அல்லாஹ்விடத்தில் உதவி தேடியவாறு சலவாத் ஓதியவாறும், பாவமன்னிப்பு வேண்டியவாறும் இந்த நாட்களை கழித்தால் மேலும் நமது உள்ளங்களை அல்லாஹ்விற்காக கலப்பற்றதாக ஆக்கிக் கொண்டால் பின்னர் நமது இறைவணக்கங்களின் தரம் உயர்ந்து விடும். மேலும் அல்லாஹ்வுடனான தொடர்பின் காரணமாக அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாக நாம் ஆகி விடுவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக இதனை எடுத்துக் கூறியுள்ளார்கள்:

ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஒருவர் மற்றவருடைய அறிமுகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆஸ்மானி ஃபைஸிலா, ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 352)

எனவே புதிதாக வரக்கூடியவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் உறவின் காரணமாக எங்கு அன்பு மற்றும் அறிமுகத்தின் உறவு நிலைபெறுமோ அங்கு பழைய உறவுகளில் மேலும் அன்பு ஏற்படுவதும் அவசியமாகும். எவர் தனது சகோதரரிடத்தில் இறைவனுக்காக அன்பு காட்டுகின்றாரோ அல்லாஹ் அவர் மீது எல்லையற்று அருள்பாலிக்கின்றான்.

எனவே இந்த நாட்களை தங்களுக்கிடையிலான பகைமையை அகற்றுவதற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள். அவ்வாறில்லையெனில் இங்கு வந்தும் எவர்களுக்கிடையில் பகைமை இருக்குமோ அவர்கள் நேர் எதிரில் சந்திக்கும்போது தங்களுக்கிடையிலான பகைமை மற்றும் கோபத்தை வெளிப்படுத்த தொடங்கி விடக்கூடாது. ஒருவர் மற்றவருக்கு எதிரான வெறுப்பும் பகைமையும் அதிகரித்து விடக் கூடாது. மேலும் இதன் காரணமாக ஜல்ஸாவின் சூழலை சீர்கெடுக்கக் கூடியவர்களாகவும் ஆகிவிடக்கூடாது. அவ்வாறு செய்தால் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாவதற்கு பகரமாக அவர்கள் அல்லாஹ்வின் சாபத்திற்கும், கோபத்திற்கும் காரணமாக ஆகி விடுவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸா சாலானாவை இறை அடையாளங்களில் சேர்த்துள்ளார்கள். எனவே எவர்கள் அல்லாஹ்வின் அடையாளங்களின் பரிசுத்தத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தின் கீழ் வந்து விடுவார்கள்.

(1931 ஆம் ஆண்டு ஆரம்ப அமர்வில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு, அன்வாருல் உலூம் தொகுதி 12 பக்கம் 389)

எனவே மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். எவர்களுக்கிடையில் பகைமை இருக்கின்றதோ அவர்கள் உடனடியாக ஒருவர் மற்றவருடன் சமாதானத்திற்கான கரத்தை உயர்த்த வேண்டும். நான் என்ற அகந்தையில் மூழ்கி விடுவதற்குப் பகரமாகவும் மேலும் பொறாமை எனும் நெருப்பில் எரிவதற்குப் பகரமாக அமைதி மற்றும் சமாதானத்தின் அழகிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலை நீங்கள் எப்போதும் கண்முன் வையுங்கள். எவருடைய கரத்தாலும், நாவாலும் எந்த முஸ்லிமிற்கும் துன்பம் ஏற்படுத்தவில்லையோ அவரே முஸ்லிம் ஆவார்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஈமான், பாபுல் முஸ்லிம் மினல் முஸ்லிமூன மன் லிஸானஹு வ யதஹு, ஹதீஸ் எண் 10)

இந்த வழிகாட்டுதல் நமது நிலைமைகளில் வெளிப்படுகின்றதா? என்றும் நமது செயல்கள் அதற்கேற்ப உள்ளனவா? என்றும் நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நூறு சதவிகிதம் நாம் இந்த வழிகாட்டலின்படி செயல்படுகின்றோம் என்பதை நம்மால் வாதித்துக் கூற முடியுமா? இது உண்மை என்றால் பொதுவாக உண்மைதான் என்று ஒவ்வொருவரும் கூறுவார். உள்ளபடியே அது உண்மை என்றால் பின்னர் கஸாவில் எந்த விவகாரங்களும் வரக்கூடாது. நம்முடைய மற்றும் நாட்டின் நீதிமன்றங்களில் உரிமைகளைப்

### திருக்குர்ஆனிலிருந்து...

எவரும் மற்றெவருக்கும் எவ்விதப் பயனும் அளிக்க முடியாத, எவருடைய பரிந்துரையும் ஏற்றுக் கொள்ளப்படாத, எவரிடமிருந்தும் (எந்த) ஈடும் பெற்றுக் கொள்ளப்படாத (ஒரு) நாளுக்கு அஞ்சுங்கள். (அந்நாளில்) அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள். (2:49)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்கள், கிறித்தவர்கள் மற்றும் சாபிகள் ஆகியோருள் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் முழுமையாக நம்பிக்கை கொண்டு அதற்கேற்ப நற்செயல் ஆற்றுபவர்க்கு நிச்சயமாக அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய வெகுமதி உண்டு. (2:63)

M.Y. Shahul Hameed (Melapalayam)

பெறுவதற்காக வழக்குகள் தொடுக்கப்படக் கூடாது. சிலர் ஜல்ஸாவிற்கு வருகின்றார்கள். ஆனால் சின்னஞ்சிறு விஷயங்களில் பழைய பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஜல்ஸாவின் நாட்களில் இந்த சூழலில் கைகலப்பில் ஈடுபட்டு விடுகின்றனர் என்பதை நான் மிகவும் வேதனையுடன் கூறிக் கொள்கின்றேன். சில முறை போலீஸையும் அழைக்க நேரிடுகின்றது.

இதுவொரு நம்பிக்கையாளரின் அடையாளமா? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்த மக்களின் செயல் இப்படியா இருக்கும்? நிச்சயமாக இல்லை. அதுபோன்ற மக்களை ஜமாஅத் அமைப்பு ஜமாஅத்திலிருந்து வெளியேற்றினாலும் இல்லையென்றாலும் அவர்கள் தனது செயல்களின் காரணமாக அல்லாஹ்வுடைய பார்வையில் ஜமாஅத்திலிலிருந்து வெளியே சென்று விடுகின்றனர்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிற்கிணங்க அவர்கள் விண்ணில் அன்னாருடைய ஜமாஅத்தைச் சார்ந்தவராக கருதப்பட மாட்டார்கள். எனவே உங்களை நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். இரட்டை நிலைபாடு இருக்கக் கூடாது. இது போன்ற மக்கள் தமது உள்ளத்தின் அழுக்குகளை அகற்ற வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மன்னிப்பையும், சமாதானத்திற்கான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு எங்களுடைய ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளில் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கின்றது என்று உலகிற்கு கூற வேண்டும்.

இதே போன்று பொறுப்பாளர்கள் இருக்கின்றனர். ஜல்ஸாவில் டியூட்டி கொடுக்கக் கூடியவர்கள் இருக்கின்றனர். அவர்களும் இந்நாட்களில் இதனைச் சிறப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் நல்லொழுக்கத்தின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். எவர்களுக்கு மற்ற சாதாரண நாட்களில் ஒருவருடன் பகைமை இருந்ததோ ஜல்ஸாவின் இந்த சூழலில் அவருடனான தொடர்பை சமாதானத்திலும் தூய்மையிலும் மாற்றுவதில் முந்திக் கொள்ள வேண்டும். மாறாக, பிறர் வந்து சூழலை மாற்றுவதற்கான நிலை வரக்கூடாது. ஜல்ஸாவில் வரக்கூடிய ஒவ்வொருவரும் விருந்தினர் ஆவார்.

ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் ஊழியரின் பணி என்னவென்றால், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளை அகற்றி விட்டு மிக மேலான நடைமுறையுடன் விருந்து உபசரிப்பை வெளிப்படுத்த வேண்டும். பொறுப்பாளர்களிடத்தில் சகிப்புத்தன்மைக்கான மனப்பாங்கு மிக அதிகமாக இருக்க வேண்டும். இது பொறுப்பாளர்களின் சிறப்பான பொறுப்பாகும்.

எனவே பொறுப்பாளர்கள் எல்லா நிலையிலும் தங்களைத் தொண்டராக கருத வேண்டும். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களும், ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களும் பொறுப்பாளர்களை ஜமாஅத் அமைப்பின் பிரதிநிதிகளாகக் கருத வேண்டும். அப்போதுதான் அடிதடி மற்றும் சண்டை சச்சரவுகளுக்கான சூழல்களிலிருந்து விலகி நல்ல நிலையை ஏற்படுத்த முடியும். மேலும் அவர்களுக்கிடையிலான பகைமையும் அகன்று விடும். சில ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்கள் தமது பொறுப்புகளைக் கருத்தில் கொள்ளவில்லை என்பதை இங்கு எனக்கு வேதனையுடன் கூற நேரிட்டுள்ளது.

நான் ஜல்ஸாவின் சூழலைப் பற்றி மட்டும் பேசவில்லை. பொதுவான சூழலிலும் தமது ஜமாஅத் பொறுப்புகளில் மார்க்கத் தொண்டை அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்குப் பகரமாக அதனை உலக பதவிகளாக புரிந்து வைத்துள்ளனர். அதன் காரணமாக அவர்களை மாற்ற நேரிட்டுள்ளது.

எனவே அதுபோன்ற மக்கள் இங்கு ஜல்ஸாவில் வந்துள்ளார் என்றால் அவர்கள் இறைவணக்கத்திலும் இறைவனை நினைவு கூர்வதிலும், பணிவிலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒருவேளை அவர்களைப் பொருத்தவரை அவர்களுக்கு எதிராக தவறான தீர்ப்பு வந்திருந்தாலும் கூட அவர்கள் பணிவின் வழிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் பணிவின் வழிகளை மேற்கொண்டு அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும்.

மேலும் ஜமாஅத் அமைப்பைப் பற்றி உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி கொள்ளக் கூடாது. தீர்ப்புகள் தவறானது என்றால் அல்லாஹ் ஒவ்வொரு விஷயங்களைப் பற்றிய ஞானத்தையும் வைத்துள்ளான். மறைவானவற்றின் ஞானத்தையும் அவன் பெற்றுள்ளான். வெளிப்படையான ஞானத்தையும் அவன் பெற்றுள்ளான். எனவே அவன் முன் பணிவுடன் குனிந்து விட வேண்டும். அவன் துஆவை ஒப்புக் கொள்கின்றான். மேலும் கஷ்டங்களிலிருந்து வெளியேற்றுகின்றான்.

அசல் விஷயம் பதவியல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, அசல் விஷயம் என்பது தனது பைஅத்திற்குரிய உரிமைகளை வழங்குவதாகும். அவர் பொறுப்பாளராக இருந்தாலும், ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்தாலும் சரி. அவர் பைஅத்தின் உரிமையை வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதற்குரிய உரிமையை வழங்குவது தொடர்பாக அறிவுரை செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது ஜமாஅத்தின் மக்களே! அல்லாஹ் உங்களுடன் இருக்கின்றான். ஆற்றலும், கண்ணியமும் படைத்த அவன் உங்களின் மறு உலகப் பயணத்தை ஆயத்தப்படுத்துவானாக. எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களை ஆயத்தப்படுத்தினானோ அவ்வாறே உங்களை ஆயத்தப்படுத்துவானாக. நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.

உலகம் ஒன்றுமே அல்ல. எவர் உலகத்திற்காக வாழ்கின்றாரோ அவரது வாழ்க்கை சாபத்திற்குரியதாகும். எவருடைய அனைத்து கவலைகளும், துன்பங்களும் உலகத்திற்காகவே இருக்கின்றதோ அத்தகைய நபர்கள் துரதிஷ்டசாலிகள் ஆவர். அதுபோன்ற மனிதர் எனது ஜமாஅத்தில் இருக்கின்றார் என்றால் அவர் வீணாக தன்னை

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் மறைப்பவற்றையும், வெளிப்படுத்துபவற்றையும் அல்லாஹ் நன்கு அறிகின்றான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லையா? அவர்களுள் சிலர் கல்வியறிவில்லாதவர்கள்; பொய்யான கருத்துக்களைத் தவிர வேதம் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. அவர்கள் வெறும் யூகம் கொள்கின்றனர். (2:78,79)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக எவர்கள் தீமையைச் செய்து அவர்களின் பாவம் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறதோ அவர்கள் நரகத்திற்கு உரியவர்கள். அவர்கள் அதிலேயே நீண்ட காலம் இருப்பர். மேலும் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் ஆற்றுபவர்கள் சொர்க்கத்திற்கு உரியோர் ஆவர். அவர்கள் அதில் (என்றென்றும்) வாழ்வர். (2:82,83)

A.Basheer Ahmad (Melapalayam)

எனது ஜமாஅத்தில் இணைத்துக் கொண்டதாக கருதுகின்றார். ஏனென்றால் அவர் காய்ந்த கிளையைப் போன்றவர். அது ஒருபோதும் கனி தராது.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: நற்பாக்கியம் பெற்ற மக்களே! உங்களின் இரட்சிப்பிற்காக எனக்கு வழங்கப்பட்ட போதனையில் மிக அழுத்தத்துடன் நுழைந்து விடுங்கள். இறைவனை இணையற்றவனாகவும், ஏகனாகவும் கருதுங்கள். அவனுக்கு விண்ணிலும் மண்ணிலும் எதனையும் இணையாக்காதீர்கள்.

இறைவன் காரணிகளைப் பயன்படுத்துவதிலிருந்து உங்களைத் தடுக்கவில்லை. ஆனால் எவர் இறைவனை விட்டு விட்டு காரணிகளின் மீதே நம்பிக்கை வைத்து அமர்ந்து விடுகின்றாரோ அவர் இணை வைப்பவர் ஆவார். தூய உள்ளம் படைத்தவராக ஆகுவதைத் தவிர்த்து இரட்சிப்பிற்கு வேறு வழியே இல்லை என்று தொன்று தொட்டே இறைவன் கூறி வந்துள்ளான். எனவே நீங்கள் தூய உள்ளம் படைத்தவராக ஆகி விடுங்கள்.

மேலும் மன இச்சைகள், பகைமைகள் மற்றும் கோபத்திலிருந்து விலகி விடுங்கள். மனிதனைத் தீமையின் பக்கம் சாய்க்கக்கூடிய ஆன்மாவின் நிலையில் பல வகையான அசுத்தங்கள் உள்ளன. ஆனால் அதில் மிகவும் அதிகமான அசுத்தம் என்பது ஆணவம் ஆகும். ஆணவம் இல்லையென்றால் எந்தவொரு நபரும் காஃபிராகி இருக்க மாட்டார்.

எனவே நீங்கள் உள்ளத்தால் ஏழ்மையை மேற்கொள்ளுங்கள். பொதுவாக மனித இனத்தின் மீது அனுதாபம் கொள்ளுங்கள். நீங்களோ மனித இனத்திற்கு சொர்க்கத்திற்கு வழிகாட்டுவதாக அறிவுரை செய்கின்றீர்கள். நீங்கள் சில நாட்கள் மனித இனத்திற்குத் தீங்கை நாடினால் உங்களது அறிவுரை எவ்வாறு சரியாக இருக்க முடியும்? இறைவனுக்குரிய கடமைகளை உள்ளத்தின் அச்சத்தால் நிறைவேற்றுங்கள்.

ஏனென்றால் அதைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்கப்படுவீர்கள். தொழுகைகளில் அதிகமாக துஆ செய்யுங்கள். அதன் மூலம் இறைவன் உங்களைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்வான். மேலும் உங்கள் உள்ளத்தை சுத்தப்படுத்தி விடுவான். ஏனென்றால் மனிதன் பலவீனமானவன் ஆவான். இறைவனின் உதவியால் மட்டுமே எந்தவொரு தீமையையும் அகற்ற முடியும். இறைவனிடமிருந்து மனிதன் ஆற்றல் பெறாத வரை எந்தவொரு தீமையையும் அகற்றுவதற்கு ஆற்றல் பெற்றவனாக இருக்க முடியாது.

சடங்கு சம்பிரதாயமாக கலிமா கூறக்கூடியவராக ஆகிவிடுவது என்பது மட்டும் இஸ்லாம் அல்ல. மாறாக, இஸ்லாத்தின் உண்மைத்துவம் என்பது உங்களது ஆன்மாக்கள் இறைவனுடைய சன்னிதானத்தில் வீழ்ந்து விட வேண்டும். இறைவன் மற்றும் அவனது கட்டளைகள் எல்லா அம்சங்களின் அடிப்படையிலும் உங்களது உலகத்தை விட உங்களுக்கு முதன்மை பெற்றதாக இருக்க வேண்டும்.

**(தஸ்கரத்துஷ் ஷஹாததைன், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 63)**

இந்த தரத்தில் முழுமை பெறுவதற்கு நம்மில் ஒவ்வொரும் முயற்சி செய்ய வேண்டும். பொறுப்பாளர்களும், ஊழியர்களும், ஜமாஅத் உறுப்பினர்களும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாரின் பைஅத்தில் நாம் வந்ததன் காரணமாக நம்மை நற்பாக்கியம் பெற்றவர்கள் என்று கூறியுள்ளார்கள். நாம் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருக்கிறோம். என்முன் அமர்ந்திருக்கின்ற மக்களிடத்தில் இறைவனின் பார்வையில் நற்பாக்கியம் இருந்தது. அதன் காரணமாக இந்த அருளை அல்லாஹ் செய்துள்ளான். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது.

ஆக, நற்பாக்கியத்திற்கான சாட்சியம் பகன்றவாறு நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். இது முதலாது அடியாகும். இதுவே முழுமையான காரியமல்ல. இதன் உச்சத்தை அடைவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளின்படி செயல்படுவது அவசியமாகும்.

உலகத்தின் வியாபாரங்களையும் பணிகளையும் ஏற்கனவே கூறப்பட்டதன் அடிப்படையில் அதாவது இறைவனின் நினைவை ஒருபோதும் மறக்கக்கூடாது என்ற சிந்தனையுடன் செய்ய வேண்டும். அல்லாஹ் உலக வியாபாரங்களிலிருந்து ஒருபோதும் தடுக்கவில்லை. மாறாக, அவை அவசியமாகும். இன்னும் கூறுவதாக இருந்தால் மனிதன் துறவியாக ஆகிவிடுவதிலிருந்தே இறைவன் தடுத்துள்ளான். உலகத் தொடர்புகளை துண்டித்துக் கொள்வதும் அல்லது உலகத்தை முற்றாக துறந்து விட்டு வாழ்வதையும் அல்லாஹ் தடுத்துள்ளான். உலகில் வாழும்படியே இறைவன் கூறியுள்ளான். ஆனால் மார்க்கத்தை விட மனிதன் உலகத்திற்கு முன்னுரிமை வழங்குவதையே அவன் தடை செய்துள்ளான். எல்லா நிலையிலும் மார்க்கமே முதன்மையானதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அஹ்மதியின் முகத்திற்குப் பின்னால் அஹ்மதிய்யத்தின் முகம் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் உள்ளது. இஸ்லாத்தின் முகம் உள்ளது. எனவே இந்த முகங்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும்.

எவர்களுக்கு அல்லாஹ் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளானோ மேலும் வாய்ப்பை வழங்கியுள்ளானோ அவர்களின் மிகப்பெரும் பொறுப்பு என்னவென்றால் அவர்கள் அந்த பொறுப்பை சரி வர நிறைவேற்ற வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வழிகாட்டலை எப்போதும் நினைவில் கெள்ள வேண்டும்.

அதாவது எம்மிடம் பைஅத் செய்து விட்டதாக வாதம் செய்த பிறகு எம்மை அவமானப்படுத்தாதீர்கள்.

**(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 137)**

எனவே இந்த வழிகாட்டுதலை எப்போதும் நீங்கள் உங்கள் கருத்தில் கொள்ளுங்கள். இது பொறுப்பாளர்களுக்கு மட்டும்தான். மற்றவர்கள் இதிலிருந்து விலகியவர்கள் என்று எவரும் கருத வேண்டாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்த ஒவ்வொருவரையும் நோக்கி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள்.

எனவே நமது சொல்லிலும் செயலிலும் நாம் ஒருபோதும் முரண்பாட்டை உருவாக்கக் கூடாது. இல்லையென்றால் பைஅத் செய்து விட்டதாக செய்கின்ற வாதம் நான் ஏற்கனவே கூறியது போன்று வீண் வாதமாகும். அந்நிலையில் ஜல்ஸாவில் கலந்து கொள்வது வெறும் உலக காரியமாகவே இருக்கும்.

நான் இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு துஆவை இப்போது எடுத்து வைக்கின்றேன். அதன்

மூலம் அன்னாருடைய உள்ளத்தில் தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்காக இருந்த வேதனை நமக்கு வெளிப்படுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் துஆ செய்கின்றேன். மேலும் எனது உடலில் மூச்சு இருக்கின்றவரை இந்த துஆவை செய்து கொண்டே இருப்பேன். அந்த துஆ இதுவே ஆகும். இறைவா! எனது இந்த ஜமாஅத் மக்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துவாயாக. நீ உனது கருணையின் கரத்தை உயர்த்தி அவர்களின் உள்ளத்தை உன் பக்கம் திருப்புவாயாக. அவர்களின் உள்ளங்களிலிருந்து அனைத்து தீங்குகளையும், பகைமைகளையும் அகற்றி விடுவாயாக. அவர்களிடைய உண்மையான நேசத்தை ஏற்படுத்துவாயாக. இந்த துஆ ஒரு நேரத்தில் ஒப்புக் கொள்ளப்படும் என நான் நம்புகின்றேன். இறைவன் எனது துஆக்களை வீணாக்க மாட்டான்.

இந்த துஆ நமது ஹக்கில் முழுமையடைய வேண்டுமென நாம் அல்லாஹ்விடத்தில் துஆ செய்ய வேண்டும். மேலும் நமது சந்ததிகளின் ஹக்கிலும் முழுமையடைய வேண்டும். கியாமத் வரை நமது சந்ததிகள் இந்த துஆவிலிருந்து பயன் பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்காக நாம் செயல் ரீதியிலான முயற்சிகளையும் செய்ய வேண்டும். மேலும் நமது நிலைகளை முயற்சி செய்து மாற்றிக் கொள்ள வேண்டும். மேலும் வேதனைமிக்க உள்ளத்துடன் துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இந்த துஆவின் அடுத்த பகுதியில் அன்னார் இவ்வாறும் துஆ செய்துள்ளார்கள். அந்த துஆ நமது ஹக்கில் ஒப்புக் கொள்ளப்படாமல் இருப்பதற்கும் நாம் துஆ செய்ய வேண்டும். அதில் அன்னார் கூறுகின்றார்கள்:

ஆம்! நான் இவ்வாறும் துஆ செய்கின்றேன். எனது ஜமாஅத்திலுள்ள ஒருவர் இறைவனுடைய அறிவிலும் எண்ணத்திலும் நிரந்திரமான துரதிர்ஷ்டசாலி என்றால் மேலும் உண்மையான தூய்மையும், இறையச்சமும் அவருக்கு கிடைப்பது அவருக்கு விதிக்கப்படவே இல்லையென்றால் அத்தகைய நபரை வல்லமை படைத்த இறைவா! எவ்வாறு அவர் உன்னிடமிருந்து விலகி இருக்கின்றாரோ அவ்வாறே அத்தகைய நபரை என்னிடமிருந்தும் அவரை அகற்றி விடுவாயாக. மேலும் அவருடைய இடத்தில் வேறொருவரை கொண்டு வருவாயாக. எவருடைய உள்ளம் மென்மையானதாகவும், எவருடைய உயிரில் உன்னுடைய தேட்டம் இருக்கின்றதோ அத்தகைய நபரை அவருடைய இடத்தில் கொண்டு வருவாயாக.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 398)

அல்லாஹ் மற்றும் அவனது வானவர்களிலிருந்து விலகி இருக்கக் கூடியவர்களின் நிலையிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. அல்லாஹ் நமது ஈமானை எப்போதும் பாதுகாப்பாக வைப்பானாக. மாறாக, அதில் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே செல்வானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களின் நன்மைக்காக செய்த அனைத்து துஆக்களையும் பெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. ஜல்ஸாவின் அருட்களுக்காகவும் மேலும் எல்லா வகையான தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும் துஆ செய்து கொண்டே இருங்கள். இந்நாட்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருங்கள். வலப் பக்கமும், இடப் பக்கமும் கண்காணித்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு தீயவரின் தீங்குகளிலிருந்தும், ஒவ்வொரு பொறாமையாளரின் பொறாமையிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பானாக.

*(11வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

பைஅத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு திருக்குர்ஆனின் ஒரு பாகத்தை அறிவு மற்றும் ஞானத்துடன் கற்றுக் கொடுங்கள். இவர்கள் பித்தர்கள் ஒன்றுமில்லையே! என்னிடம் பைஅத் செய்து மற்ற முஸ்லிம்களை விட்டு விட்டனர்.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 500)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர் தனது இல்ஹாமிய ஆற்றல் மூலம் திருக்குர்ஆனின் அறிவை முதலில் மல்லவி நூருத்தீன் சாஹிபிடம் நிரூபிக்கட்டும். அவர் தனது அசாதாரண திறமையினால் நூருத்தீன் போன்ற திருக்குர்ஆன் நேசரிடம் பைஅத் வாங்கி விட்டால் பிறகு நானும் எனது அனைத்து ஜமாஅத்தும் அவரிடம் பைஅத் செய்கிறோம்.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 501)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மற்றும் மார்க்கத்தின் உண்மையான ஞானம் மற்றும் கடமைகளை என்னால் எந்த அளவு சொற்செறிவு மற்றும் பொருட்செறிவுடன் எழுத முடியுமோ அவ்வாறு வேறெவராலும் ஒருபோதும் எழுத முடியாது. முழு உலகமும் இதனை சோதிப்பதற்கு வந்தாலும் நான் தான் வெற்றி பெறுவேன். மேலும் அனைவரும் எனக்கு எதிராக எழுந்தாலும் இறையருளால் தராசில் எனது பக்கமே கனமானதாக இருக்கும்.

(அய்யாமே ஸுல்ஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 407)

சகோதரர்களே! இறுதியாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளின் சில வரிகளை எடுத்துரைத்து நான் எனது சொற்பொழிவை நிறைவு செய்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் ஞானம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இறைவார்த்தையின் நுட்பமும் திறந்து கொண்டிருக்கிறது. வானின் அடையாளங்களும், அற்புதங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இஸ்லாத்தின் அழகு, ஒளி மற்றும் அருளுக்குரிய இறைவன் புதிய தோற்றத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றான். யாருக்கு பார்வையுள்ளதோ அவர் பார்க்கட்டும். எவரிடம் உண்மையான உணர்வு இருக்குமோ அவர் தேடட்டும். எவரிடம் சிறிதளவு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் மீதான அன்பு இருக்குமோ அவர் எழுந்து சோதிக்கட்டும்.

மேலும் இறைவன் தனது கைகளினால் அடிக்கல் நாட்டிய இறைவனது விருப்பமான இந்த ஜமாஅத்தில் இணையட்டும். மேலும் தற்போது வஹீ நின்று விட்டது. அடையாளங்கள் வெளிப்பட முடியாது. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படாது என்று கூறுவது அருளுக்குரிய வழியல்ல.

மாறாக, அது அழிவிற்குரிய வழியாகும். இறையருளை மறுக்காதீர்கள். எழுங்கள். ஆய்வு செய்யுங்கள். பரிசோதியுங்கள். ஒருவேளை சாதாரண அறிவு, சாதாரண சிந்தனை, சாதாரண கூற்றுக்களைப் பேசக்கூடிய மனிதனாக என்னைக் கண்டால் ஏற்றுக் கொள்ளாதீர்கள். ஆனால் வல்லமையின் அற்புதங்களைப் பார்த்தால் உண்மையின் ஆதரவாளர் மற்றும் இறைவனுடன் உரையாடுபவரைப் போன்று எனது கையில் பிரகாசம் தென்பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள்.

(பரகாத்துத் துஆ, ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 24)

*வஆகிரு தஃவானா அனில்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.*

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் காலத்தின் தேவை மற்றும் வானின் உதவியில் ஒளியில்

மவ்லவி மன்ஸூர் அஹ்மது சாஹிப் (ஆசிரியர், பத்ர் வாரப் பத்திரிகை, உருது இதழ்)

(தமிழாக்கம்: மவ்லவி N. ஜிஹாவுல் ஹக்)

*(30 வது இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இறைவனிடமிருந்து உறுதியான அறிவைப்பெற்று கூறுகிறேன். இந்த அனைத்து மவ்லவிகளும் அவர்களின் பிரதிநிதிகளும் மேலும் அவர்களின் முல்ஹிம்களும் (இல்ஹாம் இறங்கக்கூடியவர்) ஒன்றிணைந்து இல்ஹாமிய விஷயத்தில் என்னுடன் போட்டியிட விரும்பினால் இறைவன் அவர்கள் அனைவருக்கும் எதிராக எனக்கு வெற்றியை வழங்குவான். ஏனென்றால் நான் அவன் புறமிருந்து வந்தவனாவேன்.

(அஞ்ஜாமே ஆத்தம், ரூஹானி கஸாயின் தொகுதி 11 பக்கம் 341)

சகோதரர்களே! நான் மற்றொரு மகத்தான விண்ணின் அடையாளம் பற்றி எடுத்துரைக்கின்றேன். அது அல்லாஹ்வின் புறமிருந்து அன்னாருக்கு வழங்கப்பட்ட இல்மே குர்ஆன் அதாவது திருக்குர்ஆன் ஞானமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றிலிருந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் ...اَلرَّحْمٰنُ-عَلَّمَ الْقُرْاٰن என்ற இல்ஹாம் பதியப்பட்டுள்ளது. இந்த இல்ஹாம் மூலம் இறைவன் எனக்கு திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்கியுள்ளான்..... மேலும் என்னைக் கடலைப் போன்று அறிவு மற்றும் ஞானத்தினால் நிரப்பி விட்டான். மேலும் இந்த காலத்தில் இறைஞானம் மற்றும் இறையன்பில் உமக்கு நிகரான அறிவு மற்றும் ஞானம் பெற்றவர் யாருமில்லை என மீண்டும் மீண்டும் எனக்கு இல்ஹாம் இறக்கினான்.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தெழகுதி 13 பக்கம் 502)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மற்றொரு இறை அடையாளமான முன்னறிவிப்பு இதுவாகும். அதாவது ..اَلرَّحْمٰنُ-عَلَّمَ الْقُرْاٰن என்பதாகும். இந்த வசனத்தில் அல்லாஹ் திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளான். இந்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றினான் என்றால் தற்போது திருக்குர்ஆன் ஞானத்தில் என்னுடன் போட்டியிட எவருக்கும் ஆற்றல் இல்லை. நான் உண்மையாகக் கூறுகிறேன்.

அதாவது இந்த நாட்டில் உள்ள மவ்லவிகளில் எவரேனும் ஒருவர் திருக்குர்ஆனின் ஞானத்தில் என்னுடன் போட்டியிட விரும்பினால் நான் ஒரு அதிகாரத்திற்கு தஃப்ஸீர் (விளக்கவுரை) எழுதுகிறேன். பகைவராகிய அவரும் எழுதட்டும். ஆனால் அவர் மிகவும் இழிவடைவார். போட்டியிட முடியாமல் செல்வார். இதன் காரணத்தால் தான் பலமுறை அழைத்த போதும் கூட மவ்லவிகள் இதன் பக்கம் திரும்பவில்லை. ஆக இது நேர்மை மற்றும் ஈமான் கொண்டவருக்கு ஒரு மகத்தான அடையாளமாகும்.

(அஞ்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 291)

சகோதரர்களே! மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மிகவும் அநீதி மற்றும் நேர்மையின்மையின் வழியினைப் பின்பற்றியவாறு மக்களிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபி கல்வி மற்றும் திருக்குர்ஆனின் ஞானம் பற்றி முற்றிலும் அறியாதவராக இருக்கிறார் என கூறி வந்தார்.

மக்களை வழிகேட்டிலிருந்து காப்பாற்றுவதற்கு முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் பொய்யை வெளிப்படுத்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரை தஃப்ஸீர் போட்டிக்கு அழைத்தார்கள். ஆனால் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி பல்வேறு சாக்குப் போக்குகளையும், வீணான நிபந்தனைகளையும் கூறி ஓடி விட்டார்.

உண்மையை நிரூபிப்பதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டாவது முறையாக அவரை போட்டிக்கு அழைத்தார்கள். இதற்காக அன்னார் கராமாத்துஸ் ஸாதிகீன் என்ற நூலை (அரபியில்) சில நாட்களிலேயே யஎழுதி வெளியிட்டார்கள். அதில் அதிகாரம் ஃபாத்திஹாவின் தஃப்ஸீரை எழுதினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழில் 661 கவிதை வரிகள் கொண்ட நான்கு கஸீதாக்களை எழுதினார்கள். மேலும் ஒரு மாதத்திற்குள் அதனைப் போன்ற ஒன்றை எழுதுவதற்கு குறிப்பாக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியையும் பொதுவாக அனைத்து மவ்லவிகளையும் அழைத்தார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: ஒருவேளை மூன்றாவது நபர் மூலமாக எனது கவிதைகள் மற்றும் எனது தஃப்ஸீரை விட அவர்களது கவிதைகளும் அவர்களது தஃப்ஸீர்களும் சிறந்தது என நிரூபணமாகி விட்டால் அதனை அவர்கள் நூல் வடிவில் வெளியிடும் நாட்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு அப்படிப்பட்ட கவிதைகள் மற்றும் தஃப்ஸீரை பத்திரிகை வடிவில் வெளியிடுபவருக்கு நான் ஆயிரம் ரூபாயை ரொக்கமாக தருகின்றேன்.

(கராமாத்துஸ் ஸாதிகீன், ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 49)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த எளியவன் மீண்டும் மீண்டும் ஈமானுக்கான வெளிப்பாட்டை செய்த பிறகும் என்னை காஃபிர், முர்தத் என்று கருதும் தலையில் ஆணவம் கொண்டுள்ள அந்த அனைத்து மவ்லவிகளும் மேலும் தம்மைப் பெரிதாகக் கருதக் கூடியவர்களும் இந்த போட்டிக்கு அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் டெல்லியில் வசிப்பவராக இருந்தாலும் சரி... லக்னோவில் வசிப்பவரானாலும் சரி; லாஹூர் அல்லது வேறு ஏதாவது நகரத்தை சேர்ந்தவராக இருந்தாலும் சரி.... தற்போது அவர்களுடைய வெட்கம் மற்றும் நாணம் அவர்களிடம் எதிர்ப்பார்ப்பதெல்லாம் அவர்கள் இந்த போட்டிக்கு முன் வர வேண்டும். மேலும் ஆயிரம் ரூபாயை பெற வேண்டும் என்பதாகும்.

(கராமாத்துஸ் ஸாதிக்கீன், ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 63)

சகோதரர்களே! இதன் பிறகு அன்னார் பீர் மஹர் அலி ஷா கோல்டுவியாவிற்கு குறிப்பாகவும் ஏனைய ஆலிம்களுக்கு

பொதுவாகவும் லாஹூரில் ஒரு கூட்டம் நடத்தி திருக்குர்ஆனின் நாற்பது வசனங்களுக்கு அரபியில் தஃப்ஸீர் எழுதும் போட்டிக்கு அழைத்தார்கள். பீர் மஹர் அலி பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி ஓடி விட்டார். மேலும் மக்களிடம் தான் போட்டிக்குத் தயாராக இருப்பதாகவும், தன்னால் போட்டியிட முடியும் என்றும் ஏமாற்றி வந்தார்.

சகோதரர்களே! நபியின் பணி மீண்டும் மீண்டும் தனது சான்றை நிரூபிப்பதாகும். அதன் மூலம் எவரிடம் நேர்வழியினை அடைவதற்கான தன்மை இருக்குமோ அவர்கள் நேர்வழி பெற வேண்டும். இந்த வகையில் ஆதாரத்தை நிரூபிப்பதற்காக இரண்டாவது முறை அன்னார் அவர்களை அதிகாரம் ஃபாத்திஹாவின் தஃப்ஸீர் எழுதும் போட்டிக்கு அழைத்தார்கள். அன்னார் இதற்காக 70 நாட்களை கால அவகாசமாக நிர்ணயித்தார்கள். இந்த நாட்களில் நீங்களும் வீட்டில் அமர்ந்து அதிகாரம் ஃபாத்திஹாவிற்கு தஃப்ஸீர் எழுதுங்கள். நானும் எழுதுகின்றேன் என்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பகைவர்களாகிய அவர்கள் இந்த தஃப்ஸீர் எழுதுவதற்கு உலகின் அனைத்து ஆலிம்களிடமிருந்தும் உதவி பெறுவதற்கு அனுமதி உண்டு. மேலும் இதற்காக அரபு நாட்டின் அறிஞர்களையும் வல்லுனர்களையும் அழைத்துக் கொள்ளட்டும். மேலும் ஏனைய அரபு மொழி பேராசிரியர்களிடமிருந்து கூட உதவி பெற்றுக் கொள்ளட்டும்.

15 டிசம்பர் 1900 முதல் 70 நாட்கள் நம் இருவருக்கும் உள்ள கால அளவு ஆகும். மேலும் எனக்கு எதிராக தஃப்ஸீர் எழுதிய பின்னர் அரபு நாட்டின் மூன்று மொழி வல்லுனர்கள் அந்த தஃப்ஸீரை சொற்செறிவு மற்றும் பொருட்செறிவு நிறைந்ததாகவும், ஞானம் நிறைந்நதாக கருதினால் நான் ஐநூறு ரூபாயை ரொக்கமாக அவருக்கு வழங்குவேன். மேலும் என அனைத்து நூல்களையும் எரித்து விடுவேன். மேலும் அவரது கையில் பைஅத் செய்வேன்.

(அரபயீன் 4 ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 449)

சகோதரர்களே! குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஃஜாஸுல் மஸீஹ் என்ற பெயரில் அதிகாரம் ஃபாத்திஹாவிற்கான தஃப்ஸீரை அரபியில் சொற்செறிவு மற்றும் பொருட்செறிவுடன் எழுதி வெளியிட்டார்கள். ஆனால் பீர் மஹர் அலி அவர்களால் எதுவும் எழுதி வெளியிட முடியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆக அவரது பெயர் மஹர் அலி இல்லை. மாறாக, மொஹர் அலி ஆகும். ஏனென்றால், அவர் தனது இயலாமை மற்றும் அமைதியாக இருந்ததன் மூலம் இந்த நூல் இஃஜாஸுல் மஸீஹின் உயர்வை உறுதி செய்து விட்டார்.

(நுஸூலுல் மஸீஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 432)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என் உயிர் எவனது கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! எனக்கு திருக்குர்ஆனின் அறிவு மற்றும் ஞானத்தைப் புரிவதில் ஒவ்வொரு ஆன்மாவின் மீதும் வெற்றி வழங்கப்பட்டுள்ளது. நான் திருக்குர்ஆனுக்கு தஃப்ஸீர் எழுதுவதில் போட்டிக்காக மீண்டும் மீண்டும் அழைத்ததற்கேற்ப எனக்கு எதிரில் ஏதாவது ஒரு மவ்லவி வந்தால் இறைவன் அவரை இழிவுபடுத்துவான். தோல்வியுறச் செய்வான். ஆக திருக்குர்ஆன் அறிவு எனக்கு வழங்கப்பட்டிருப்பது அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும்.

(சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 41)

சகோதரர்களே! கணக்கர் இலாஹி பக்ஷ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சீடராக இருந்தார். தூய்மை மற்றும் பற்றுணர்வில் மிகைத்திருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1889 ஆம் ஆண்டு பைஅத்தின் மூலம் ஜமாஅத்தின் அடிக்கல்லை நாட்டினார்கள். தனது சீடர்களை பைஅத்தில் இணையும்படி கூறியபோது திடீரென்று இலாஹி பக்ஷ் வழிதவறி விட்டார். அவர் காதியான் வந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கொஞ்சமும் வெட்கமின்றி தனது கனவு மற்றும் இல்ஹாம்களைக் கூறினார்.

மேலும் ஒரு கனவில் நான் உங்களிடம் ஏன் பைஅத் செய்ய வேண்டும். தாங்கள் என்னிடம் பைஅத் செய்யுங்கள் என கூறினேன் என்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது அந்த பழைய சீடரை அழிந்து போவதிலிருநது காப்பாற்றுவதற்காக மகத்துவமிக்க நூல் ஸரூரத்துல் இமாம் (இமாமின் தேவை) என்ற நூலை இயற்றினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது அன்பரே! நாம் அறிவு, ஞானம் மற்றும் வானின் அருட்களுக்கு பசித்தவராகவும், தாகித்தவராகவும் உள்ளோம். ஒரு கடலை அருந்திய பின்னரும் வயிறு நிரம்பவில்லை. ஆக நம்மை ஒருவர் அடிமையாக்க விரும்பினால் மிகவும் எளிய வழியாக பைஅத்தின் அர்த்தத்தை புரிந்து அதன் சரியான போதனையை மனதில் வைத்து இந்த வியாபாரத்தை நம்மிடம் செய்து கொள்ளலாம். மேலும் நம்மிடம் இல்லாத அறிவும், ஞானமும், விண்ணின் அருட்களும் அவரிடம் இருக்குமென்றால் மேலும் நமக்கு வழங்கப்படாத திருக்குர்ஆனின் அறிவு அவருக்கு வழங்கப்பட்டிருக்குமென்றால் அந்த சான்றோர் எம்மிடம் சீடர் மற்றும் கட்டுப்படுதலுக்கான கையை எடுத்தக் கொள்ளட்டும்.

மேலும் அந்த ஆன்மீக அறிவு, திருக்குர்ஆனின் ஞானம் மற்றும் வானின் அருட்களை எமக்கும் வழங்கட்டும். நான் அதிகமாக கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை. நமது நண்பர் ஏதாவது ஒரு கூட்டத்தில் அதிகாரம் இக்லாஸின் ஞானத்தை எடுத்துரைக்கட்டும். அதனை விட ஆயிரம் மடங்கு அதிகமாக நாம் எடுத்துரைக்கவில்லை என்றால் நாம் அவருக்கு கட்டுப்பட்டவராவோம்.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 498)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சத்தியமாக கூறுகின்றேன். நமது நண்பர் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அறிவுரை கூறும்போது எந்த அளவு திருக்குர்ஆனின் அறிவு மற்றும் ஞானத்தை எடுத்துரைப்பார்களோ அதில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட இந்த நண்பரின் வாயிலிருந்து வெளிப்படும் என எனக்கு நம்பிக்கை இல்லை.

(ஸரூரத்துல் இமாம், ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 500)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது ஜமாஅத்தில் என்னிடம் பைஅத் செய்த இறையடியார்களில் ஓர் ஆண் மகன் உள்ளார். அவர் மிகப்பெரிய அறிஞர் ஆவார். அவர் ஹஸ்ரத் ஹகீம் ஹாபிஸ் ஹாஜி ஹரமைன் நூருத்தீன் சாஹிப் ஆவார்கள். அவர்கள் அனைத்து தஃப்ஸீர்களையும் தன்னிடத்தில் வைத்திருப்பார்கள். இதேபோன்று அவர்களின் உள்ளத்தில் திருக்குர்ஆனின் ஆயிரக்கணக்கான ஞானங்கள் பொதிந்துள்ளது. அவர்களுக்குத்தான் உண்மையில்

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 08 Aug 2019 Issue No. 32

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதலாவது பக்கத்தின் தொடர்ச்சி...)*

இருக்கின்றன. எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. பராஹீனே அஹ்மதிய்யாவிலும் நான் இதைக் குறிப்பிட்டுள்ளேன். அதாவது இஸ்லாத்திற்கு எதிராக ஆறு கோடி நூல்கள் எழுதப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

ஆனால் வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், இந்தியாவில் முஸ்லிம்களின் எண்ணிக்கையும் ஆறு கோடியாகும். இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்ட நூல்களின் எண்ணிக்கையும் அதே எண்ணிக்கையில் இருக்கின்றது. மேலும் இந்த நூல்களில் மேலும் அதிகமாக வந்துள்ள பிரதிகளை நாம் விட்டு விட்டாலும் கூட நமது எதிரிகள் ஒவ்வொரு முஸ்லிமின் கையிலும் ஒரு நூலைக் கொடுத்து விட்டார்கள். அல்லாஹ்வின் தன்மானம் வெளிப்படவில்லை என்றால் மேலும் إِنَّا لَهُ لَحٰفِظُوْنَ என்ற அவனது வாக்குறுதி வெளிப்படவில்லை என்றால் பிறகு இன்று இஸ்லாம் உலகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கும். மேலும் அதன் பெயரும், அடையாளமும் கூட அழிந்திருக்கும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இறைவனது மறைமுகமான கை அதனைப் பாதுகாத்து வருகின்றது. ஆனால் எனக்கு வருத்தமும் துக்கமும் இந்த விஷயத்தினால் ஏற்படுகின்றது. அதாவது மக்கள் தம்மை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொண்டு சிறிதளவு கூட இஸ்லாத்திற்காக கவலை கொள்வதில்லை.

மேலும் கிறிஸ்தவ பெண்கள் மரணிக்கும்போது லட்சக்கணக்கான ரூபாய்களை கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்புவதற்காக உயில் எழுதி வைத்து விட்டு மரணித்துள்ளனர் என்பதை எனக்கு மீண்டும் மீண்டும் படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் அவர்கள் தமது வாழ்க்கையை கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்காக அர்ப்பணிக்கின்றனர் என்பதை நாம் அனுதினமும் காண்கின்றோம். ஆயிரக்கணக்கான மிஷனரி பெண்கள் வீடு வீடாக தொருக்களில் சுற்றித் திரிகின்றனர். அவர்களால் எவ்வாறெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் ஈமானைப் பறிக்கின்றனர்.

முஸ்லிம்களில் ஒருவரைக் கூட, அவர் ஐம்பது ஆயிரம் ரூபாயைக் கூட இஸ்லாத்தைப் பரப்புவதற்காக உயில் எழுதி விட்டு மரணித்துள்ளார் என்பதை நான் காணவில்லை. ஆனால் திருமணங்கள் மற்றும் உலக சடங்குகளில் வீண் விரயம் செய்கின்றனர். மேலும் கடன் வாங்கி பரந்த மனதுடன் தேவையில்லாத செலவுகள் செய்யப்படுகின்றது. வருத்தத்திற்குரிய விஷமாகும். இதை விட முஸ்லிம்களின் நிலையைக் கண்டு வருந்துவதற்கு வேறு என்னதான் இருக்க முடியும்?

### நன்மையின் கூலி வீணாகுவதில்லை

அல்லாஹ் ஒரு நிராகரிப்பவரின் நன்மையின் கூலியைக் கூட வீணாக்கவில்லை. இவ்வாறிருக்கும்போது முஸ்லிம்களின் நன்மையின் கூலியை வீணாக்கி விடுவானா? எனக்கு ஒரு சஹாபியின் கூற்று நினைவிற்கு வந்தது. அதாவது அவர், நபிகள் நாயகமே! நான் நிராகரிப்பின் காலகட்டத்தில் அதிகமான தான தர்மங்கள் செய்துள்ளேன். அதற்குரிய கூலி எனக்கு கிடைக்குமா? என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அந்த தான தர்மங்கள்தான் நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்குக் காரணியாக அமைந்தது என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 61–63 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்தான பணி

❁ عَنْ اَبِیْ هُرَيْرَةَ رَضِیَ اللهُ عَنْهُ قَالَ كُنَّا جُلُوْسًا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذْ نَزَلَتْ عَلَيْهِ سُوْرَةُ الْجُمُعَةِ فَلَمَّا قَرَأَ وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ، قَالَ رَجُلٌ مَّنْ هٰؤُلَآءِ يَارَسُوْلَ اللهِ؟ فَلَمْ يُرَاجِعْهُ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَتّٰى سَأَلَهُ مَرَّةً اَوْ مَرَّتَيْنِ اَوْ ثَلَاثًا قَالَ وَفِيْنَا سَلْمَانُ الْفَارِسِيُّ قَالَ فَوَضَعَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَدَهٗ عَلٰى سَلْمَانَ ثُمَّ قَالَ: لَوْ كَانَ الْاِيْمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهٗ رِجَالٌ مِنْ هٰؤُلَآءِ۔

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்கள் மீது சூரா ஜுமுஆ இறங்கியது.

அவர்களுக்கு வ ஆகரீன மின்கும் லம்மா யலஹகூ பிஹிம் அதாவது இதுவரை சஹாபாக்களை சார்ந்திராத, பின்னர் வரக்கூடிய மக்களுக்கு மத்தியிலும் என்ற வசனத்தை ஓதிய போது ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதுவரை சஹாபாக்களை சார்ந்திராத அதே சமயத்தில் சஹாபாக்களின் தகுதியில் இருக்கின்ற இந்த மக்கள் யார் ? என்று கேட்டார்.

பெருமானார் (ஸல்) அந்த கேள்விக்கு எந்த பதிலையும் கூறவில்லை. அந்த மனிதர் மூன்று முறை இதே கேள்வியை திரும்பத் திரும்ப கேட்டார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார். அந்த சமயத்தில் ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் எங்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கையை அவர்களின் தோளின் மீது வைத்தார்கள். பிறகு ஈமான் கார்த்திகை நட்சத்திரத்திற்கு அருகில் சென்று விட்டாலும் அதாவது பூமியிலிருந்து மேலே சென்று விட்டாலும் இந்த மக்களிலிருந்து சிலர் அதை மீண்டும் கொண்டு வருவர் என்று கூறினார்கள்.

(அதாவது பின்னவர்கள் என்பவர்கள் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்களிலிருந்தே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார். அவர்கள் மீதே நம்பிக்கை கொள்பவர்கள் சஹாபாக்களின் தகுதியை பெறுவர்.)

(புகாரி கிதாபுத் தஃப்ஸீர் சூரா ஜுமுஆ, முஸ்லிம், ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் நம்பர் 941)

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்கும், அவனது வானவர்களுக்கும், அவனது தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும் எவர் பகைவராக உள்ளாரோ நிச்சமயாக அத்தகு நிராகரிப்பவர்களுக்கு அல்லாஹ்வும் பகைவனாவான். நிச்சயமாக நாம் உம்மீது மிகத் தெளிவான அடையாளங்களை இறக்கினோம். கட்டுப்படாதவர்களைத் தவிர வேறெவரும் அவற்றை நிராகரிப்பதில்லை. (2:99,100)

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad